Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 56/2023 and 206/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | செல்வம் |
| Father/Husband Name | : | நாகு |
| Village | : | கழுகூரணி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2026.

(12 – 16 எதிரிகள் ஆஜரில்லை, 12 – 16 எதிரிகள் தரப்பில் BNSS–355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் தாலுகா லாந்தை குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி ஜெகதீசனை தெரியும். அவர் நான் பட்டினம்காத்தான் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது கிராம உதவியாளராக பணிபுரிந்தார். கடந்த 16.10.2018ம் தேதி நான் பட்டினம்காத்தான் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது கேணிக்கரை காவல் ஆய்வாளர் இரவு 09.00 தொலைபேசியில் தொடர்பு கொண்டு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகில்

உள்ள மல்லம்மாள் கோவில் அருகே உள்ள BSNL அலுவலகத்திற்கு அருகே வரச்சொன்னார். நானும், கிராம உதவியாளர் ஜெகதீசனும் சென்றோம். நாங்கள் அந்த இடத்திற்கு சென்றபோது இரவு 09.10 இருக்கும். அங்கே கேணிக்கரை காவல் ஆய்வாளர் கார்த்திக் என்பவர் இறந்த இடத்தில் வரைபடம் மற்றும் மகசர் தயாரிக்க சாட்சிகளாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்த இடத்தில் தெருவிளக்கு வெளிச்சத்திலும், டார்ச் லைட் வெளிச்சத்திலும், மின்வெளி வெளிச்சத்திலும் கார்த்திக் இறந்த இடத்தில் இரத்தம்படிந்த சிறிதளவு மண்ணும், இரத்தம்படியாக சிறிதளவு மண்ணும், காட்டன் வெள்ளைநிற சட்டை ஒன்றையும், பிரவுன் ஒயிட் கலர் கோடுபோட்ட கைலி ஒன்றையும் எடுத்து மகசர் தயார் செய்து கைப்பற்றினார். பின்னர் விக்னேஷ்வரன் இறந்த இடத்தில் இரத்தம்படிந்த சிறிதளவு மண்ணும், இரத்தம்படியாக சிறிதளவு மண்ணும் எடுத்து அங்கேயே மகசர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அந்த மகசரில் நானும், கிராம உதவியாளர் ஜெகதீசனும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3**. இது சம்மந்தமாக கேணிக்கரை காவல் ஆய்வாளர் எங்களை விசாரித்தார்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

ஆய்வாளர் விசாரணையில் கடந்த 18.10.2018 ம் தேதி இரவு 09.00 மணிக்கு இந்த வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரிகளான ரூபன்,த/பெ.சின்னச்சாமி, முருகேசன்,த/பெ.சின்னச்சாமி, முரளி,த/பெ.பெரியசாமி, அர்சுனன்,த/பெ.அழகன், பாஸ்கரன்,த/பெ.முனியசாமி ஆகிய 5 எதிரிகளும் நயினார்கோவில் காவல்நிலையத்தில் சரண்டர் ஆனதாகவும், அந்த எதிரிகளை கேணிக்கரை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரரித்தபோது அவர்களை விசாரித்தபோது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதாகவும் சொன்னதின்பேரில் அதற்கு சாட்சியாக நானும், கிராம உதவியளார் ஜெகதீசனும் இருக்க

கேட்டுக்கொண்டதின்பேரில எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் விசாரித்தபோது மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை ஆய்வாளர் பதிவு செய்து என்னிடமும், கிராம உதவியாளர் ஜெகதீசனிடம் கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ரூபன், த/பெ.சின்னச்சாமி, முருகேசன், த/பெ.சின்னச்சாமி, முரளி,த/பெ.பெரியசாமி, அர்சுனன்,த/பெ.அழகன், பாஸ்கரன், த/பெ.முனியசாமி ஆகிய 5 நபர்களும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த கையெழுத்துக்கள் முறையே **அ.சா.ஆ.4 முதல் 8**. எதிரி ரூபன் ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய பச்சைகலர் குவாலிஸ்கார் (TN 59 PA 9573) ஒன்றும், Hero Passion Pro (TN 65 AA 5668) பைக் ஒன்றையும் எங்கள் முன்னிலையில் ஆஜர்படுத்தினார் என்றும், அந்த வாகனங்களை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி எங்களிடம் கையெழுத்து பெற்றார் என்றால் சரிதான். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9. எதிரி முருகேசன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய பச்சைகலர் குவாலிஸ்காரில் மறைத்துவைத்திருப்பதாகவும் அந்த அருவாளை எடுத்து தருவதாக கூறி எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அந்த அருவாளை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி எங்களிடம் கையெழுத்து பெற்றார் என்றால் சரிதான். அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.10**. அதேபோல் எதிரி முரளி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை அதே பச்சை கலர் குவாலிஸ்காரில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அந்த அருவாளை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி எங்களிடம் கையெழுத்து பெற்றார் என்றால் சரிதான். அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.11**. அதேபோல் எதிரி அர்ஜீனன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை அதே பச்சை கலர் குவாலிஸ்காரில் மறைத்து

வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அந்த அருவாளை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி எங்களிடம் கையெழுத்து பெற்றார் என்றால் சரிதான். அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.12**. அதேபோல் எதிரி குண்டுபாஸ்கரன்,த/பெ.முனியசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை அதே பச்சை கலர் குவாலிஸ்காரில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அந்த அருவாளை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி எங்களிடம் கையெழுத்து பெற்றார் என்றால் சரிதான். அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.13**. பின்னர் 02.11.2018 ம் தேதியன்று நாங்கள் பணியிலிருந்தபோது கேணிக்கரை காவல் ஆய்வாளர் அழைத்ததின்பேரில் காவல் நிலையம் சென்றோம். அங்கு எதிரிகள் பாஸ் என்கிற பாஸ்கரன், பெரியசாமி மகன் பூமிநாதன், பூசை மகன் பூமிநாதன் ஆகியோர்களை நீதிமன்ற காவலில் இருந்து விசாரிப்பதற்கு காவல்நிலையத்தில் வைத்திருப்பதாக சொன்னதின்பேரில் எங்களை அழைத்தார்கள். நானும், கிராம உதவியாளரும் காவல்நிலையம் சென்றோம். அப்போது எதிரிகளில் பாஸ் என்ற பாஸ்கரன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.14.** பின்னர் எதிரி பூமிநாதன் த/பெ.பெரியசாமி எங்கள் முன்பு தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.15.** பின்னர் எதிரி பூமிநாதன் த/பெ.பூசை எங்கள் முன்பு தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.16.** அதன்

பின்னர் 10.11.2018ம் தேதி குணசேகரன் என்பவரை கைது செய்து வைத்திருப்பதாகவும் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக நானும், கிராம உதவியாளரும் காவல்நிலையம் சென்றோம். அங்கு எதிரி குணசேகரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் அடிப்படையில் பேராவூர் சந்திப்புக்கு அருகில் மறைத்து வைத்திருந்த அருவாளை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.17.** அதன் பின்னர் வழக்கின் மற்றொரு எதிரியான தவம் என்ற அறிவழகன் என்பவரை நீதிமன்ற காவலில் இருந்து போலிஸ் காவலில் எடுத்து வைத்திருந்தவரை விசாரிக்க வேண்டி எங்களை அழைத்ததின்பேரில் நானும், கிராம உதவியாளரும் கேணிக்கரை காவல்நிலையத்திற்கு சென்றோம். அப்போது எதிரி இரவு 08.00 மணியளவில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.18.** ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவ இடத்திலிருந்து தப்பித்துசெல்வதற்காக கருப்பு கலர் பல்சர் பைக்கை தேவக்கோட்டையில் உள்ள பைக் ஸ்டாண்டில் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை எங்கள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.19.** பின்னர் 15.04.2019ம் தேதி நீதிமன்றத்தில் சரண்டர் ஆகியிருந்த சரவணன் என்பவரை போலிஸ் காவலில் எடுத்து விசாரிப்பதற்காக ஆய்வாளர் அழைத்ததின்பேரில் நானும், கிராம உதவியாளரும் கேணிக்கரை காவல்நிலையம் சென்றோம். 16.04.2019ம் தேதி காலை 07.00 மணிக்கு எதிரி சரவணன் என்பவர் ஆய்வாளர் விசாரிக்க தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.20.** அந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து

பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வாளர் பார்வை மகசர் தயாரித்தபோது அங்கு கூட்டமாக இருந்தது என்றால் இல்லை. பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார்செய்த இடத்தில் தான் கையெழுத்து போட்டேன். பார்வை மகசர் மற்றும் வரைபடத்தை எழுதியது யார் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் ரூபன், முருகேசன், முரளி, அர்ஜினன், பாஸ்கரன் ஆகியோர்களை என்றைய தினம் ஆய்வாளர் கைது செய்தார் என்பதோ, எங்கு வைத்து யார் முன்னிலையில் கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், காவல் நிலையத்திற்கு வரவழைத்தார்கள், அதன்பேரில்தான் சென்றேன். கேணிக்கரை காவல் நிலையம் அதிக பொதுமக்கள் வந்துபோகும் இடம் என்று சொன்னால் சரிதான். அங்கு சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வெளியேயும், உள்ளேயும் பொதுமக்கள் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலங்கள் அனைத்தும் மேற்சொன்ன எதிரிகள் ஒவ்வொருவராக சொல்லசொல்லத்தான் டைப் செய்து கொள்ளப்பட்டது என்றால் சரிதான். யார் டைப் செய்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் போகும்போது டைப் செய்து வைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை, நான் சென்றபின்புதான் டைப் செய்யப்பட்டது. குவாலிஸ்கார் எங்கிருந்து, எந்த தேதியில், யார் மூலமாக கொண்டுவரப்பட்டது என்பது எனக்கு தெரியாது, காவல்நிலையத்திற்கு வடக்குப்பக்கமாக நின்றது. இந்த விவரங்கள் அனைத்தும் ஆய்வாளர் எனக்குசொல்லி அந்த அடிப்படையில்தான் இந்த கார் மற்றும் ஆயுதங்கள் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக சொன்னதின்பேரில்தான் தெரியும் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை எந்தெந்த எதிரிகள் வைத்திருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. நான் சொன்ன மாதிரி, தேதியில் நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றாலும், அங்கு வைத்து எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்த ஆயுதங்களையும் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலங்களும், அத்தாட்சியும் ஏற்கனவே தயார் செய்துகொள்ளப்பட்டதில் நானும், தலையாரியும் கையெழுத்து செய்தோம் என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 02.11.2018 ம் தேதி எதிரிகள் பாஸ் என்ற பாஸ்கரன்,

பெரியசாமி மகன் பூமிநாதன், பூசை மகன் பூமிநாதன் ஆகியோர்களை என்றைய தினம் அவர்களை நீதிமன்ற காவலில் இருந்து எடுத்திருந்தார்கள் என்பதும், அவர்களை எங்கு வைத்திருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். காலை 09.00 மணி என்பது மக்கள் அதிகமாக காவல்நிலையத்தில் இருக்கக்கூடிய நேரம் என்றால் சரிதான். கேணிக்கரை காவல்நிலையத்திற்கு முன்பாகவும், உள்ளேயும் பொதுமக்கள் சாதாரணமாக போய்வந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் டைப் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது, ஆனால் காவல்நிலையத்தில் இருந்த காவலர்கள் தான் அடித்தார்கள். ஒருவர் வாக்குமூலம் கொடுத்த பிறகு, பின்னர் அடுத்த படியாக அடுத்த நபரை விசாரித்து வரிசையாக அடிக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்த வாகனங்களையும், ஆயுதங்களையும் காட்டித்தான் எங்களிடம் அத்தாட்சியில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அவைகள் எப்படி, எங்கிருந்து காவல்நிலையம் வந்தது என்றால் எனக்கு தெரியாது. பின்னர் 10.11.2018 மற்றும் 12.11.2018 ம் தேதி அன்று குணசேகரன் மற்றும் தவம் என்ற அறிவழகனை என்றைய தினம் காவலில் எடுத்தார்கள் என்பதோ, அவர்களை எங்கு வைத்திருந்தார்கள் என்பதோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் டைப் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது, ஆனால் காவல்நிலையத்தில் இருந்த காவலர்கள் தான் அடித்தார்கள். ஒருவர் வாக்குமூலம் கொடுத்த பிறகு, பின்னர் அடுத்த படியாக அடுத்த நபரை விசாரித்து வரிசையாக அடிக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்த வாகனங்களையும், ஆயுதங்களையும் காட்டித்தான் எங்களிடம் அத்தாட்சியில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அவைகள் எப்படி, எங்கிருந்து காவல்நிலையம் வந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் பலவழக்குகளில், பல நீதிமன்றங்களில் இதுபோன்று சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி பெறும்போது நான் காவல்நிலையத்தில் இருந்தேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் என்னிடமும், கிராம உதவியாளர் ஜெகதீசனிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதிகளில் நான் எங்கும் செல்லவில்லை என்றும், என் முன்னிலையில் எந்த எதிரியும் எந்த

வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்தவிதமான ஆயுதங்களோ, வாகனங்களோ என் முன்னிலையில் எந்த எதிரியும் ஆஜர்படுத்தவில்லை என்றும், ஆவணங்கள், சான்றுப்பொருட்கள் அனைத்தும் இந்த வழக்கில் ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்ததை நானும், தலையாரியும் கையெழுத்து செய்திருக்கிறோம் என்றும் சொன்னால் சரியல்ல. போலிசாருக்காக இருந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.